1993 ஏப்ரல் 16]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலைக்குறவர்கள், தங்களுக்கு தற்போது கிடைக்கும் சலுகைகளை, அவர்கள் முழுவதும் பெற்றும்கூட, சமுதாயத்தில் குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் பெற முடிய வில்லை. இந்தநேரத்தில் பழங்குடியினர் இனத்தில் இருக்கும் இவர்களை, தாழ்த்தப்பட்ட இனத்திற்கு மாற்றம் செய்வதால், இந்தச் சமுதாயம் மிகவும் பின்தங்கிவிடும் ; அவ்வாறு செய்யப் பட மாட்டாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித் தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றிதெரிவித் துக் கொள்வதுடன், மேலும் நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும், குறவர், குறவன் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் இதேபோன்று இருக்கிறார்கள். அவர்கள், சமுதாயத்தில் குறிப் பிட்ட அளவு எந்த ஒரு முன்னேற்றமும் பெறாமல் இருக் கிறார்கள். எனவே, அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டிய லில் இருந்து, பழங்குடியினர் இனத்திற்கு மாற்ற அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசு எடுக்கவேண்டிய முடிவு என்பதால், இது மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 379, திரு. க. குப்பன், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

379—

மீனவர்கள் தொழில் செய்ய வழங்கப்பட்ட நீண்டகால கடன்களை தள்ளுபடி செய்தல்.

*9751— திரு. க. குப்பன் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களின் வாழ்வு மலர, தொழில் செய்ய அளிக்கப்பட்ட நீண்டகால கடன்களைத் தள்ளுபடி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1993 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய சமுதாய மீனவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், இன்றையதினம் கடலிலே சென்று மீன்பிடிக்க முடியாத வயது முதிர்ந்த ஏழை எளிய மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிற திட்டத்தை அறிவித்திருக்கிற எங்கள் இதய தெய்வமுமாகிய மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1960-ஆம் ஆண்டு முதல், 33 ஆண்டுகளுக்கு முன்பு, வாங்கிய நீண்டகாலக் கடன்களை, இன்றைக்கு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்களுக்குக் கடன் இருக்கிறது என்ற காரணத்தினால், எந்தச் சலுகையும் பெற முடியாமல் இருப்பதால் இன்றைக்கு இருக்கிற அந்தச் சூழ்நிலையை மாற்றி, அந்த ஏழை எளிய மீனவ மக்களுடைய நலனிலே அக்கறையுள்ள அரசு, இந்த நீண்டகால கடனை தள்ளுபடி செய்யுமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பல்வேறு சமூகப்-பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில், வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகைகளை தள்ளுபடி செய்யும் கருத்துரு அரசினால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுடைய இந்த நீண்டகால கடன்கள் தள்ளுபடி செய்வது, அரசின் ஆய்விலே இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த கடன் தள்ளுபடி செய்கிற பிரச்சினை எவ்வளவு விரைவில் முடிக்கப்படும் என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு விரைவில் முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 380.

திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.